<u>சுருக்கம்</u>

**தமிழ் நாடு மாநில தொண்டு நிறுவனங்கள் மற்றும் தன்னார்வ ஆதார மையம் – ஆட்சிக் குழு (Governing Body) 2009–10ஆம் ஆண்டில் நியமிக்கப்பட்ட உறுப்பினர்களையே 2010–2011ம் ஆண்டுக்கு தொடர்ந்து செயல்பட அனுமதி – ஆணை வெளியிடப்படுகிறது.**

---

ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி (மஅதி – 3) துறை

அரசாணை ( நிலை) எண்.13

நாள்: 01.02.2010
தை – 19
திருவள்ளுவர் ஆண்டு – 2041
படிக்கப்பட்டவை:-

1. அரசாணை (நிலை) எண். 3, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி ( மஅதி3) துறை நாள் 5.1.2009.
2. மேலாண்மை இயக்குநர், தமிழ்நாடு மகளிர் நல மேம்பாட்டு நிறுவனம் அவர்களின் கடித எண்.0003/ஆட்சிக்குழு உருவாக்குதல் பிரிவு/டிஎன்விஆர்சி /2010 நாள் 8.1.2010.

******

<u>ஆணை:-</u>

மேலே படிக்கப்பட்டுள்ள அரசாணையில், தமிழ்நாடு மாநில தொண்டு நிறுவனங்கள் மற்றும் தன்னார்வ ஆதார மையத்தின் ஆட்சிக்குழு தமிழ்நாடு மகளிர் நல மேம்பாட்டு நிறுவன மேலாண்மை இயக்குநரால் பரிந்துரைக்கப்பட்ட உறுப்பினர்களைக் கொண்டு மாற்றியமைக்கப்பட்டது.

2. தற்பொழுது, இரண்டாவதாகப் படிக்கப்பட்ட கடிதத்தில் தமிழ்நாடு மகளிர் நல மேம்பாட்டு நிறுவன மேலாண்மை இயக்குநர், தமிழ்நாடு மாநில தொண்டு நிறுவனங்கள் மற்றும் தன்னார்வ ஆதார மையத்தின் ஆட்சிக்குழு கடைசியாக ஜனவரி 2009ல் மாற்றியமைக்கப்பட்டது எனவும், அவ்வாணையில், மாற்றியமைக்கப்பட்ட இந்நிறுவனத்தின் ஆட்சிக்குழுவின் கூட்டமைப்பினை ஓராண்டிற்குப்பின் ஆய்வு செய்யலாம் என ஆணையிடப்பட்டது என்றும், 10.1.2010 உடன் இக்குழுவின் ஒரு வருட பணிக்காலம் முடிவடைந்து விட்டது எனவும், மாற்றியமைக்கப்பட்ட ஆட்சிக்குழு தனது பணியை மிகச் சிறப்பாக செய்துள்ளது என்றும் தெரிவித்து நடப்பாண்டிலும் (11.1.2010 முதல் 10.1.2011 வரை) ஏற்கனவே உள்ள உறுப்பினர்களையே ஆட்சிக்குழுவில் உறுப்பினர்களாகத் தொடர்ந்து செயல்பட அனுமதி வழங்குமாறும், ஓராண்டிற்குப் பின்னர், இந்த ஆட்சிக்குழு கூட்டமைப்பினை மறு ஆய்வு செய்யலாமெனவும் கூறி, அரசின் ஆணையை வேண்டியுள்ளார்.

3. தமிழ்நாடு மகளிர் நல மேம்பாட்டு நிறுவன மேலாண்மை இயக்குநரது கருத்துருவினை அரசு கவனமுடன் ஆய்வு செய்தது. அதனடிப்படையில் அவரது கருத்துருவினை ஏற்றுக் கொள்ளலாமென முடிவுசெய்து கடந்த வருடத்தில் (2009–10ஆம் ஆண்டில் ) ஆட்சிக் குழுவிற்கு நியமனம் செய்யப்பட்ட பின்வரும் உறுப்பினர்களையே நடப்பாண்டிலும் (2010–2011ஆம் ஆண்டில்) ஆட்சிக்குழு உறுப்பினர்களாகத் தொடர்ந்து செயல்பட அனுமதி வழங்கி ஆணையிடுகிறது.

1. திரு.என்.கே.பெருமாள், நிர்வாக இயக்குநர், ஊரக வளர்ச்சி அறக்கட்டளை, நீலகிரி மாவட்டம். — தலைவர்

(த.பி.பா)

| | | |
|---|---|---|
| 2. | நிர்வாக இயக்குநர், தமிழ்நாடு மகளிர் நல மேம்பாட்டு நிறுவனம் | இணைத் தலைவர். |
| 3. | கூடுதல் இயக்குநர் (திறன் வளர்ப்பு) தமிழ்நாடு மகளிர் நல மேம்பாட்டு நிறுவனம் | செயலாளர். |
| 4. | நிதி ஆலோசகர், தமிழ்நாடு மகளிர் நல மேம்பாட்டு நிறுவனம் | பொருளாளர். |
| 5. | இயக்குநர், மாநில ஊரக வளர்ச்சி பயிற்சி நிறுவனம், மறைமலை நகர் | உறுப்பினர் |
| 6. | திரு. எம். கந்தசாமி, பட்டயக் கணக்கர் | உறுப்பினர் |
| 7. | திரு.எம்.பி. நிர்மல், நிறுவனர், எக்ஸோனாரா இன்டர்நேஷனல் | உறுப்பினர் |
| 8. | தேசிய அலுவலர், டாட்டர்ஸ் ஆப் மேரி இம்மாகுலேட் (Daughters of Mary Immaculate) | உறுப்பினர். |
| 9. | திரு. பி. அழகேசன், திட்ட ஒருங்கிணைப்பாளர், மைராடா, விவசாய அறிவியல் மையம் (MYRADA, Krishi Vigyan Kendra) | உறுப்பினர். |

4. மேலும், இந்த ஆட்சிக்குழுவின் கூட்டமைப்பினை (Composition) ஓராண்டிற்குப் பின்னர் மறு ஆய்வு செய்யப்பட வேண்டும் எனவும் அரசு ஆணையிடுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

க.அஷோக் வர்தன் ஷெட்டி
அரசு முதன்மைச் செயலாளர்.

பெறுநர்
மேலாண்மை இயக்குநர்,
தமிழ்நாடு மகளிர் நல மேம்பாட்டு நிறுவனம், சென்னை – 600 032.
அனைத்து ஆட்சிக்குழு உறுப்பினர்கள்,
தமிழ்நாடு மாநில தொண்டு நிறுவனங்கள் மற்றும்
தன்னார்வ ஆதார மையம் ,
( மேலாண்மை இயக்குநர், தமிழ்நாடு மகளிர் நல மேம்பாட்டு நிறுவனம் மூலமாக)
இயக்குநர், மாநில ஊரக வளர்ச்சி பயிற்சி நிறுவனம், மறைமலைநகர்,
காஞ்சிபுரம் மாவட்டம்.
<u>நகல்:-</u>
முதன்மைச் செயலாளரது தனிச் செயலர், ஊரக வளர்ச்சி மற்றும்
ஊராட்சித் துறை, சென்னை – 600 009.
இருப்புக் கோப்பு / உதிரிக் கோப்புகள்

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

பிரிவு அலுவலர்.